ஆண்டு சந்தா ரூ. 60/–

# அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்





மலர் : 6

இதழ் : 2

டிசம்பர் 2009

## மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்.

லூக்கா 2:10



ஆசிரியர்

சகோ. வே. தேவதாஸ்

## உங்கள் சகோதரனிடமிருந்து....



ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் அன்பு வாழ்த்துக்கள்.

இம்மட்டும் உதவிய எபினேசர், இம்மானுவேலராக நம்மோடு இருந்தபடியால் திரியேக தேவனுக்கு நன்றி கூறுகிறோம். மனமகிழ்ச்சியானதும், ஆண்டின் இறுதியுமான இந்த டிசம்பர் மாதத்தில் நல்லாசீர்வாதங்களை நம் ஒவ்வொரு குடும்பத்திற்கும், ஊழியங்களுக்கும், சபைக்கும் தேவன் தந்தருளுவாராக!

கடந்த நவம்பர் மாதத்தில் 3–ம் தேதி முதல் 6–ம் தேதி வரை நம்முடைய பீல் சுதேச ஊழியர்களின் குடும்ப முகாமை நடத்துவதற்கு தேவன் கிருபை தந்தார். நவம்பர் 9–13 வரை குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களிலும் 5 ஷாலோம் மருத்துவ முகாம்களை நடத்த தேவன் கிருபை தந்தார். ஆயிரக்கணக்கான மக்கள் இயேசுவின் நாமத்தில் ஆசீர்வாதங்களை பெற்றார்கள்.

மேலும் தேவநாமம் மகிமைப்படும்படியாக 20.11.2009 வெள்ளிக்கிழமை அன்று நம்முடைய சபைகளை இணைத்து Shalom Diocese in India என்று அத்தியட்சாதீனமாக ஆரம்பிக்கவும், அடியேனை பேராயராக அபிஷேகம் பண்ணவும், 77 பீல் சுதேச ஊழியர்களை போதகராக அபிஷேகம்பண்ணவும் தேவன் கிருபை தந்தார். இந்த மகிமையான ஆராதனைகளை Anglican Churches, India *மூலமாக* **The Most Rt. Rev. Dr. Duraisingh James, The Most Rev. Dr. John Sathia Kumar, The Rt. Rev. John S.D. Raju** மூவருமாக வந்து சிறப்பாக நடத்தி தந்தார்கள். இதன் விபரங்களை அடுத்த சிறப்பு மலராக வெளியிடுவோம்.

வெகுவிரைவில் தேவ ஒத்தாசையுடன் 1000 சுதேச ஊழியர்களை போதகர்களாக உருவாக்கவும், 1000 சபைகள் நம் பாரத தேசத்திற்கு சாட்சியுள்ள, ஆசீர்வாதமான திருச்சபைகளாக விளங்கவும் எங்களை அர்ப்பணித்து உள்ளோம். தொடர்ந்து ஜெபித்து நல்லாதரவுகளை தர வேண்டிக்கொள்கிறோம்.

மனமகிழ்ச்சியான இந்த கிறிஸ்துமஸ் பண்டிகை காலங்களில் நம் 435 சுதேச ஊழியர்களையும், நாம் ஆதரிக்கும் 800–க்கும் அதிகமான பீல் ஆதிவாசி மாணவர்களையும் நினைவு கூறுங்கள். உங்களால் முடிந்த கிறிஸ்துமஸ் சிறப்பு காணிக்கைகளை அனுப்பி அவர்களை உற்சாகப்படுத்த அன்புடன் கேட்கிறேன்.

உங்களுக்காக நாங்கள் யாவரும் ஜெபித்து வருகிறோம். பணித்தளத்திருந்தும், தலைமை

"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்".

ஏசாயா 9:6

*தேவ அறுவடைபணியில் உங்கள் அன்பு சகோதரன்*



*(வே. தேவதாஸ்)*



# மிகுந்த மகிழ்ச்சி உண்டாக்கும் நற்செய்தி

சிறப்புச் செய்தி : **Rt. Rev. Dr. V. தேவதாஸ்**

**"தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்". லூக்கா 2:10**

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பான கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள். கிறிஸ்துமஸ் பண்டிகை அதாவது இயேசு கிறிஸ்து உலக இரட்சகராக பிறந்தார் என்ற நற்செய்தி மகிழ்ச்சி தரும் நற்செய்தியாகும். கிறிஸ்து இரட்சகர் பிறப்பு உலகத்தின் அனைத்து ஜனங்களுக்கும் மகிழ்ச்சி தரும் செய்தியாகும். பாவிகளை அழிப்பதற்காக அல்ல பாவிகளை ரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் பிறந்தார் என்பதுதான் மகிழ்ச்சியான செய்தி. இருளில் இருக்கும் ஜனங்கள் மாபெரும் வெளிச்சத்தைக் கண்டார்கள் என்பது எத்தனை மகிழ்ச்சி. ஆனால் இந்நாட்களில் இந்த மகிழ்ச்சி புத்தாடை அணிவதிலும், புதிய நகைகள்அணிவதிலும், பொருட்கள் வாங்குவதிலும், பலகாரங்களை செய்து ருசியான உணவுகளை புசிப்பதும், குடிப்பதுமான காரியங்களிலும், வீடுகளை அலங்காரப்படுத்தும் காரியங்களிலும், பட்டாசுகளை வெடிப்பதிலும், அநேகருக்கு வாழ்த்து அட்டை SMS, email–ல் அனுப்புவதும் மகிழ்ச்சியை தருவதாக உள்ளது. ஆனால் மெய்யான மகிழ்ச்சி எப்படி கிடைக்கிறது.

## ***1. கிறிஸ்து இயேசுவை கண்டுகொள்ளுவதில் மகிழ்ச்சி***

கிறிஸ்துமஸ் பண்டிகையை பாரம்பரிய பண்டிகையாக கொண்டாடுவதில் நமக்கு பூரணமான மகிழ்ச்சி கிடைப்பதில்லை. இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு உள்ளத்தில் அவர் பிறப்பதுதான் உண்மையான மகிழ்ச்சியை கொண்டுவரும். கிறிஸ்து நம் உள்ளத்தில், கிறிஸ்து நம் இல்லத்தில், கிறிஸ்து நம் சபையில் இல்லையெனில் இவையெல்லாம் அர்த்தமற்றவையாகிவிடும். பெத்லேகேமில் இயேசு பிறப்பதற்கு இடமில்லை என்று கூறிவிட்டார்கள். அநேகர் உள்ளங்களிலும், இல்லங்களிலும், சபைகளிலும் இயேசுவுக்கு இடமில்லை. வேடிக்கையான ஒரு கதையை கேள்விபட்டேன். வெளிநாடு ஒன்றில் ஒரு கறுப்பு மனிதன் ஆலயத்தை தேடி அலைந்து ஆலய மணி ஓசை கேட்டு ஆலயத்தை கண்டுபிடித்தான். என்ன பரவசம், அழகான கோபுரம், கண் கவரும் கட்டிடம், விலையுயர்ந்த அலங்கார பொருட்கள், அழகான தளவாடங்கள், இன்னிசை கருவிகள் இவைகளைக் கண்டு ஆச்சரியத்துடன் சந்தோஷமாக உள்ளே நுழையும் வேளையில் ஒரு வெள்ளை மனிதன் தடுத்து நிறுத்தினான். ஐயா இயேசுவை ஆராதிக்க உள்ளே விடுங்கள் என கெஞ்சுகிறான். ஆனால் அவனோ

கறுப்பனாகிய உனக்கு இடமில்லை என்று கூறி வெளியேற்றிவிட்டார்கள். கவலையுடன் வெளியே நிற்கும்போது இன்னொரு மனிதனை கண்டான். அவனிடம் தன் நிலைமையை கூறி அங்கலாய்த்தான். அப்போது அந்த மனிதன் என்னையும் 40 வருடங்களாக உள்ளே விடவில்லை என்று கூறினான். அந்த கறுப்பு மனிதன் ஐயா நீர் யார் என்று கேட்டபோது நான்தான் ''இயேசு'' என்றாராம். எனக்கன்பானவர்களே இயேசு இல்லாத உள்ளங்களாய், இல்லங்களாய், சபைகளாய் கொண்டாடவேண்டாம். அவரை காண்போம், தரிசிப்போம், உள்ளத்தில் ஏற்றுக்கொள்வோம். மேய்ப்பர்கள், அன்னாள், கிதியோன், சாஸ்திரிகள் பெற்ற மகிழ்ச்சி நமக்கும் கிடைப்பதாக!

## *2. இரண்டாவதாக பாலகன் இயேசுவை துதிப்பதினால் வரும் சந்தோஷம்*

நம் வாழ்வில் இயேசு கிறிஸ்துவின் பிறப்பை சந்தோஷமாக துதிப்பதிலும், ஆனந்திப்பதிலும் மிகுந்த சந்தோஷம் உண்டாகும். புசிப்பும் குடிப்பும் தேவராஜ்ஜியமில்லை, பரன் ஆவியால் மகிழ்வோம் என்று சாரோன் நவரோஜ் அவர்கள் பிறந்தார், பிறந்தார் பாடலில் பாடியுள்ளார்கள்.

**1. தேவ தாசர்கள் பாடி துதித்தார்கள்**

இயேசு கிறிஸ்து பிறந்தபோது தேவ தூதர்கள் பரம சேனை திரளாக வந்து

**"உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்".** (லூக்கா 2 :14)

**2. மேய்ப்பர்கள் துதித்தார்கள்**

தேவ தூதர்களின் மூலமாக நற்செய்தி கேட்ட மேய்ப்பர்கள் தீவிரமாய் வந்து இயேசு பாலகனை கண்டு ஆச்சரியப்பட்டார்கள்

**"மேய்ப்பர்களும் தங்களுக்குச் சொல்லப்பட்டதின்படியே கேட்டு, கண்ட எல்லாவற்றிற்காகவும் தேவனை மகிமைப்படுத்தி, துதித்துக் கொண்டு திரும்பிப் போனார்கள்".** (லூக்கா 2 : 20)

**3. சிமியோன் தேவனை துதித்தார் (லூக்கா 2 : 25–29)**

அப்பொழுது சிமியோன் என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் எருசலேமில் இருந்தான்; அவன் நீதியும் தேவபக்தியும் உள்ளவனாயும், இஸ்ரவேலின் ஆறுதல் வரக் காத்திருக்கிறவனாயும் இருந்தான்; அவன்மேல் பரிசுத்த ஆவி இருந்தார்.

கர்த்தராகிய கிறிஸ்துவை நீ காணுமுன்னே மரணமடையமாட்டாய் என்று பரிசுத்த ஆவியினாலே அவனுக்கு அறிவிக்கப்பட்டுமிருந்தது. அவன் ஆவியின் ஏவுதலினால் தேவாலயத்திலே வந்திருந்தான், இயேசு என்னும் பிள்ளைக்காக நியாயப்பிரமாண முறைமையின்படி செய்வதற்குத் தாய் தகப்பன்மார் அவரை உள்ளே கொண்டு வருகையில், ஆண்டவரே, உமது வார்த்தையின் படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர்.

**4. அன்னாளும் தேவனை துதித்தாள். (லூக்கா 2 : 37,38)**

ஏறக்குறைய எண்பத்துநாலு வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம்பண்ணி, ஆராதனை செய்து கொண்டிருந்தாள். அவளும் அந்நேரத்திலே வந்து நின்று, கர்த்தரைப் புகழ்ந்து, எருசலேமிலே மீட்புண்டாக காத்திருந்த யாவருக்கும் அவரைக் குறித்து பேசினாள்.

**5. மரியாளும் தேவனை துதித்தாள். (லூக்கா 2 : 46,47)**

மூன்று நாளைக்குப் பின்பு, அவர் தேவாலயத்தில் போதகர் நடுவில் உட்கார்ந்திருக்கவும், அவர்கள் பேசுகிறதைக் கேட்கவும், அவர்களை வினாவவும் கண்டார்கள். அவர் பேசக்கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும் அவர் சொன்ன மாறுத்தரங்களையுங்குறித்துப் பிரமித்தார்கள்.

**6. ஆவியில் களிகூர்ந்த எலிசபெத்**

எலிசபெத் மரியாளின் வாழ்த்துதலை கேட்டபோது அவளுடைய வயிற்றிலிருந்த பிள்ளை (யோவான்) துள்ளிற்று. எலிசபெத் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டாள். மரியாளை பார்த்து இதோ நீ வாழ்த்தின சத்தம் என் காதில் விழுந்தவுடனே என் வயிற்றிலுள்ள பிள்ளை (யோவான்) களிப்பாய் துள்ளிற்று என்றாள். நம் இரட்சகராகிய இயேசவை ஏற்றுக் கொள்வதால் உண்டாகும் மகிழ்ச்சியுடன், பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவர்களாய் இயேசுவை துதிக்கும்போது நாம் உண்மையான மகிழ்ச்சியினால் நிரப்பபப்படுவோம்.

## ***3. நற்செய்தி அறிவிப்பதினால் கிடைக்கும் மகிழ்ச்சி***

கிறிஸ்துமஸ் பண்டிகையின் கொண்டாட்டத்தின் உச்சக்கட்டம் எது தெரியுமா?

யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பது தான். எல்லா காரியங்களையும் நிறைவேற்றிவிட்டு ஒருவருக்கு கூட இந்த நற்செய்தியை அறிவிக்காவிட்டால் முழுமையான மகிழ்ச்சியை பெற இயலாது. ஒரு வீட்டில் சாப்பிட அமர்ந்த போது அழகான சுவரொட்டியில் இப்படியாக எழுதப்பட்டிருந்தது. ***"To double your Joy; share it with others"***

சுவிசேஷங்களில் வாசித்துப் பாருங்கள்...

- ❖ நட்சத்திரம் சாஸ்திரிகளுக்கு வழிகாட்டி, கிறிஸ்து பிறந்த இடத்திற்கு கொண்டு வந்தது.
- ❖ தேவ தூதர்கள் பரலோகத்திலிருந்து வந்து மேய்ப்பர்களுக்கு நற்செய்தி அறிவித்தார்கள்.
- ❖ மேய்ப்பர்கள் தாங்கள் கேட்டு, அறிந்து, கண்டு, பெற்றுக் கொண்ட நற்செய்தியை பிரசித்தம் செய்தார்கள்.

இந்த இயேசு கிறிஸ்து நமக்காக மட்டுமல்ல, கிறிஸ்தவர்களுக்காக மட்டும் கிறிஸ்து உலகத்திற்கு வரவில்லை. இந்த கிறிஸ்துமஸ் பண்டிகை நாட்களில் ஒவ்வொருவரும் குறைந்தது கிறிஸ்துவை அறியாத இரண்டு குடும்பங்களை அழைத்து விருந்து கொடுத்து நற்செய்தியை அறிவித்து சுவிசேஷ பங்குகளைக் கொடுக்கலாம். உங்கள் ஸ்தல சபைக்கு அழைத்து செல்லுங்கள். மனம் திரும்பும் ஒரு ஆத்துமாவை குறித்து பரலோகத்தில் மிகுந்த மகிழ்ச்சி உண்டாகும். அந்த மகிழ்ச்சியும் சந்தோஷமும் இந்த நாட்களில் நம்மை நிரப்பட்டும். இச்செய்தி நம் பீல் மக்கள் ஷாலோம் சபையில் ஒவ்வொரு விசுவாசிகளுக்கும் தங்கள் குடும்பங்களில் இரட்சிக்கப்படாதவர்களுக்கு சுவிசேஷம் அறிவித்து, நல்ல விருந்தளித்து சபைக்கு அழைத்து வர தீர்மானித்துள்ளார்கள். நாமும் நற்செய்தியை அறிவிப்போம். நம்முடைய மகிழ்ச்சியை இரட்டிப்பாக்குவோம். பரலோகமும் மகிழ்ந்து களிகூரும்.

***இது நற்செய்தி அறிவிக்கும் நாள்! உன்னதத்தில் தேவனுக்கு மகிமை உண்டாவதாக!***

## கிராம ஆலய பிரதிஷ்டைகள்

நம் ஷாலோம் ஊழியத்தையும், பீல் மக்களையும் அதிகமாய் நேசிக்கும் அன்பு சகோதரர் மோகன்.சி.லாசரஸ் (இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடி) அவர்கள் மூலமாக இவ்வருடம் ரூ.22,00,000/- மதிப்பில் 10 கிராமங்களில் அழகான மாதிரி ஆலயங்கள் கட்டுவதற்கு தேவன் கிருபை தந்துள்ளார். அதில் முதல் மூன்று ஆலயங்களை இயேசு விடுவிக்கிறார் குழுவினர் பணித்தளத்திற்கு வந்து 08.11.2009 ஞாயிற்றுகிழமை அன்று வந்து பிரதிஷ்டை செய்து வைத்தார்கள்.

| | | |
|---|---|---|
| கங்கேலா | குஜராத் | சகோ. ஜெபசிங் |
| அந்தர்வேலியா | மத்தியபிரதேசம் | சகோ. ஸ்டீபன் |
| பேடவ் | இராஜஸ்தான் | சகோ. குணசிங் |

மற்ற 7 ஆலயங்கள் இம்மாத இறுதிக்குள் பிரதிஷ்டை செய்யப்படும். இயேசு விடுவிக்கிறார் ஊழியங்காகவும், சகோ.மோகன்.சி.லாசரஸ் அவர்களுக்காகவும் தேவனை துதித்து அவர்களுக்கு ஷாலோம் சபை சார்பில் நன்றியை கூறுகிறோம்.

## சுதேச ஊழியர் சாட்சி

# சகோ. நவல் புரியா

### குஜராத்



என்னுடைய பெயர் நவல் புரியா. நாங்கள் இயேசுவை அறியாததற்கு முன்னர் விக்கிரகங்களை வணங்கிவந்தோம். அப்பொழுது எங்கள் வீட்டில் ஆசீர்வாதம் இல்லாமல் அந்தகாரத்தில் இருந்தோம். பிசாசின் பிடியினால் கட்டப்பட்டு பல வேதனைகளையும், கஷ்டங்களையும் அனுபவித்தோம். எனது அப்பா அதிகமாக சாராயம் குடித்துவிட்டு சண்டைபோட்டு அடித்தார். இதனால் எங்கள் வீட்டிற்கு அருகே இருப்பவர்கள், சொந்தக்காரர்கள் அனைவரும் பயப்படுவார்கள். நாங்கள் எங்கள் மனம்போன போக்கில் வாழ்ந்து கொண்டிருந்தோம். எங்களுக்கு நல்ல வழியைகாட்ட யாரும் இல்லை. ஒருமுறை எங்கள் வீட்டிற்கு அருகே இருந்த விசுவாச சகோ. சிமளியாபாய் என்ற சகோதரர் எனது வீட்டிற்கு வந்து என் அப்பாவிடம் இயேசுவைப்பற்றிக் கூறினார். நாங்கள் விசல்பூர் சபை ஆராதனையில் கலந்துகொண்டோம். ஊழியர் எங்களுக்காக ஜெபித்தபிறகு எனது அப்பா குடிப்பதை நிறுத்திவிட்டார். இயேசு எங்களை சாபத்திலிருந்தும், பாவத்திலிருந்தும் விடுவித்தார். எங்கள் குடும்பத்திற்கு ஆசீர்வாதம் வந்தது.

தேவன் எங்களுக்கு நல்ல வழியை காண்பித்தார். என் இருதயத்தில் சமாதானம் வந்தது. இயேசுவே ஜீவனுள்ள தேவன் என்பதை உணர்ந்த நான் அவருக்காக ஊழியம் செய்ய ஒப்புக்கொடுத்தேன். சில வருடங்களுக்குப்பிறகு ஷாலோம் ஊழியத்தில் இணைந்து குடும்பமாக ஊழியம் செய்து வருகிறோம்.

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : A.G. Church, Sathiyamangalam

## பீல் சுதேச ஊழியர்களுக்கும், சிறு பிள்ளைகளுக்கும்

# கிறிஸ்துமஸ் வெகுமதி



அன்பார்ந்த ஷாலோம் ஊழிய ஆதரவாளர்களே!

ஷாலோம் மிஷனெரி பணியில் தேவன் உங்களையும் இணைத்து பீல் ஆதிவாசி மக்களுக்கு ஆசீர்வாதமாக பயன்படுத்தி வருகிறபடியால் தேவனைத் துதிக்கிறோம்.

வருடந்தோறும் கிறிஸ்துமஸ் மனமகிழ்ச்சியின் நாட்களில் நம்முடைய சுதேச ஊழியர்களுக்கும் அவர்கள் மனைவிமார்களுக்கும், அவர்கள் பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் கொடுப்பது வழக்கம். மேலும் நம்முடைய பள்ளி, விடுதியில் படித்துவரும் நம் ஆதிவாசி மாணவ, மாணவிகளுக்கும், சிறு பிள்ளைகளுக்கும் புத்தாடைகள், வெகுமதிகள் கொடுக்கலாம் என ஜெபித்துத் தீர்மானித்துள்ளோம்.

ஆகவே வருகிற மாதத்தில் நமக்கு இதற்காக நிதி உதவி சுமார் ரூ. 7 லட்சங்கள் தேவைப்படுகிறது. ஆகவே கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவினால் ஒரு ஊழியரின் குடும்பத்திற்கு ரூ. 1000/- அல்லது அதற்கு மேலாகவோ, ஒரு ஆதிவாசி பிள்ளைக்கு ரூ. 500/- கிறிஸ்துமஸ் வெகுமதிக்காகக் கொடுத்து உதவ மிக அன்பாய் கேட்கிறோம்.

இந்த வெகுமதி காணிக்கைகளை விரைவாக அனுப்பினால் சுதேச ஊழியர்கள் குடும்பத்திற்கும், ஆதிவாசி பிள்ளைகளுக்கும் வெகுமதிகளை துரிதமாகக் கொடுக்க உதவியாக இருக்கும்.

கிறிஸ்துமஸ் வெகுமதியை நேரடியாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கலாம். அல்லது எங்கள் ஷாலோம் பிரதிநிதிகளிடம் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளவும்.

இந்த பீல் மக்களின் சந்தோஷத்தோடு கிறிஸ்துமஸ் பண்டிகையை கொண்டாடுங்கள். தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



*May God Bless You*



கடந்த ஆண்டு ஆதிவாசி சிறுவர்களுக்கு
நம் மூலம் கொடுக்கப்பட்ட கிறிஸ்துமஸ் வெகுமதிகள்

**NET TRANSFER மூலமாக காணிக்கை அனுப்புவோர் கவனத்திற்கு...**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, **Internet** உதவியோடு **NET TRANSFER** மூலமாக காணிக்கை அனுப்பிய பின்பு உடனடியாக எங்களுக்கு காணிக்கை அனுப்பிய அனைத்து விபரங்களையும் ஈ–மெயில் மூலமாகவோ, எஸ்.எம்.எஸ். மூலமாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தெரியப்படுத்த மிக அன்பாயக் கேட்கிறோம். நீங்கள் தெரிவிக்கத் தவறினால் காணிக்கை அனுப்பியது யார் என்பது தெரியாமல்கூட போக வாய்ப்புள்ளது. ஆகவே தயவு கூர்ந்து தகவல்களைத் தெரிவிக்க அன்பாய் கேட்கிறோம். இது எங்களுடைய கணக்கில் வரவு வைத்துக் கொள்ளவும், உங்களுக்கு ரசீது மற்றும் நன்றிக் கடிதம் உடனடியாக அனுப்பவும் ஏதுவாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**email : info@shalommission.in, Cell : 9345675468**

"பலத்தினாலும் அல்ல பராக்கிரமத்தினாலும் அல்ல,
என்னுடைய (சேனைகளின் கர்த்தருடைய) ஆவியினாலே ஆகும். சகரியா 4:6

# ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகை

இடம்

**ஷாலோம் கிளை அலுவலகம்,**

M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்)
வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

| நாள் | நேரம் |
|---|---|
| **19.12.2009, சனிக்கிழமை** | **மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை** |

சிறப்பு செய்தி

***Bro. D. அருள்தாஸ்*** மார்த்தாண்டம்

யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக
ஜெபிக்கவும், தேவனுடைய ஆசீர்வாதங்களைப்
பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.

தொடர்புக்கு:–

| | |
|---|---|
| **சகோ. செல்வதுரை,** | **Cell : 94876-89869,** |
| **சகோ. ஜார்ஜ்,** | **Cell : 9487689869,** |
| **சகோ. கிங்பெர்ட்,** | **Cell : 94868-64820** |

*ஷாலோம் சுதேச ஊழியர்கள்*

# குடும்ப ஆசீர்வாத முகாம்-2009

தேவ கிருபையினாலும், உங்கள் யாவருடைய ஜெபங்களினாலும் இவ்வருடம் குஜராத்தில் "ஆனந்த்" பட்டிணத்தில் நவம்பர் 3 முதல் 6 வரை மூன்று மாநிலங்களிலும் உள்ள 435 சுதேச ஊழியர்கள், மற்றும் பணித்தள அலுவலக ஊழியர்கள், Hostel, School மற்றும் Project ஊழியர்கள் குடும்பங்களாக இணைந்து நடத்துவதற்கு தேவன் கிருபை தந்தார்.

இந்த முறை சகோ. மோகன் சி. லாசரஸ் (இயேசு விடுவிக்கிறார்) அவர்களின் எதிர்பாராத மற்ற ஊழியத்தின் நிமித்தமாக அவர்கள் வர இயலாவிட்டாலும் அவர்கள் உடன் ஊழியர்கள் சகோ. அப்பாத்துரை, சகோ. ஜெயக்குமார், சகோ. சாம் ஜெபராஜ் அவர்களை சிறப்பு செய்தி வழங்க அனுப்பி வைத்தார்கள். அவர்களுடன் சகோ. ஸ்டீபன், சகோ. ஜெபசிங் மற்றும் சிறப்பு வீடியோ, ஆடியோ மற்றும் புகைப்படங்களை நேர்த்தியாக எடுப்பதற்கு சகோ. குணசிங் மற்றும் சகோ. யோசுவா அவர்களும் வருகை தந்தார்கள். நவம்பர் 3–ம் தேதி மாலையில் அனைத்து ஊழியர்களும் குடும்பம், குடும்பமாய் திரண்டு வந்தார்கள். மாலையில் சிறப்பு ஆராதனை, பாடல்களை நடத்தித்தர Pas. Daniel (New Life Assembly, Mumbai) அவர்கள் குழுவாக வருகை தந்தார்கள். மட்டுமல்லாமல் வட இந்தியாவில் தேவனால் பயன்படுத்தப்படும் Pas. Wilson George (சன்டிகார்) அவர்களும் குடும்பமாக வந்து அபிஷேக ஆராதனைகளை நடத்தித் தந்தார்கள். அனைத்து ஊழியர்களும் தேவ பிரசன்னத்தில் ஆடி, பாடி மகிழ்ந்து களிகூர்ந்தார்கள். ரக்வாலா, மாஹி, மாஹி என்ற பாடல்களை பாடி தேவனை மகிமைப்படுத்தினார்கள். மிகப்பெரிய சந்தோஷம் உண்டானது. மட்டுமல்லாமல் ஆடி பாடி துதித்தது மட்டுமல்ல, ஆராதிக்கும்போது ஷெக்கினா மகிமை இறங்கி வந்தது. அர்ப்பணிப்பின் பாடல்களை பாடும்போது கண்ணீரோடு கூட தங்களையும், குடும்பங்களையும், தங்கள் ஊழியங்களையும் அர்ப்பணித்தது தேவனுக்கு மகிமையை கொண்டு வந்தது. பரலோகத்தின் மகிமையை பூமியில் ருசிபார்க்கும் அனுபவமாய் மாறியது.

ஒவ்வொரு வருடமும் ஒரு போதகரை ஜெபத்துடன் அழைப்பதுண்டு. இவ்வருடம் சிவகாசி திருத்தங்கலை சேர்ந்த போதகர். ஜான்ராஜ் (உள்ளங்கை அளவு மேக ஊழியங்கள், மூத்த சபை போதகர்) அவர்களை அழைத்தோம். ஒவ்வொரு நபருக்கும் பரத்திலிருந்து வரும் மன்னாவாக தேவ செய்திகள் அமைந்தது.

1. தேவன் நம்மோடு இருக்கும் போது – என்னென்ன ஆசீர்வாதங்கள். 2. மேய்ப்பனும்– தேவனுடைய வசனமும் 3. பெற்றுக்கொண்ட அபிஷேகத்தையும், வரங்களையும் அனல்மூட்டுவது என்ற தலைப்புகளில் தந்த செய்திகள் மூலமாக அனைத்து ஊழியர்களும் ஆத்துமாவிலும், ஆவியிலும் பெலனடைந்தார்கள்.

இயேசு விடுவிக்கிறார் சகோ. அப்பாத்துரை அவர்கள் விதை விதைக்கிறவன் பலனை பெற்றுக்கொள்ளும் பலன் ஏசாயா 30:23–யை ஆதாரமாக வைத்து அவர்களுடைய அனுபவ சாட்சிகளுடன் பகிர்ந்துகொண்டார்கள். இரண்டாவது நாள் கருத்தாக ஜெபிப்பதைக் குறித்து

Iபேதுரு 4 : 7–யை ஆதாரமாக வைத்து தெளிவாக பகிர்ந்துகொண்டார்கள். இந்த செய்தி அனைவரையும் புதிய ஆழமான அர்ப்பணத்திற்கு நேராக வழி நடத்தியது. சகோ. சாம் ஜெபராஜ் அவர்கள் இயேசுவை போல் ஊழியம் செய்வதைக் குறித்து தேவசெய்தி கொடுத்தது அனைவரும் புது கிருபைகளை பெற்றுக்கொள்ளவும், ஊழியப்பாதையில் உற்சாகத்தையும் தந்தது. சகோ. ஜெயக்குமார் அவர்கள் மூன்றாம் நாள் (05.11.09) அன்று சந்தியா வேளையில் தானியேல் தேவனுடன் கொண்ட ஆவிக்குரிய உறவுகளையும், அனுபவங்களையும் பகிர்ந்து, அந்த உன்னதமான அனுபவங்களை கடந்து செல்லும்படியாக அபிஷேகத்தில் நடத்தி சென்றார்கள். இறுதியாக ஒவ்வொரு குடும்பங்களும் ஜெபத்துடன் அபிஷேக ஆராதனையில் பங்குபெற்றார்கள். தேவ ஊழியர்கள் தங்கள் கரங்களை வைத்து ஜெபித்தபோது அளவில்லா அபிஷேக தைலம் ஊற்றப்பட்டு, தரிசனங்களையும், வல்லமையையும் பெற்றுக்கொண்டது கண்கொள்ளா பரலோக காட்சியாக இருந்தது. அவருக்கே துதி கனம் உண்டாவதாக!

மேலும் போதகர். வில்சன் ஜார்ஜ் (சன்டிகார்) அவர்கள் ஆராதனையின் அவசியத்தையும், அபிஷேகத்தையும் குறித்து தேவ செய்தியை வழங்கினார்கள். Pas. Daniel (New Life Church, Mumbai) அவர்களின் அனுபவ சாட்சியுடன் கூடிய செய்தி அனைவரின் உள்ளத்தையும் உடைய வைத்து அர்ப்பணிக்க வைத்தது. சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள் இயேசுவின் மேலிருந்த பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் குறித்தும், சகோ.தேவதாஸ் அவர்கள் பவுலின் ஊழியம் எடுத்துக்காட்டான ஊழியம் என்பதை குறித்தும் பேசி 1000 திருச்சபைகள், 1000 சுதேச ஊழியர்கள் தரிசனத்திற்கு நேராக வழிநடத்தினார்கள். ஒவ்வொரு நாளும் பீலி, பிலோடி, வாகுடி கலாச்சார நடனங்களை ஊழியர்களின் குடும்பத்தார் நடனமாடி தேவனை மகிமைப்படுத்தினார்கள். தாகோத் பணித்தள அலுவலக ஊழியக்காரர்கள் சிறப்புப் பாடல்களையும், ஊழியக்காரிகள் சிறப்புப் பாடல்களையும் பாடி தேவனை துதித்தார்கள்.

இயேசு விடுவிக்கிறார் சார்பில் அனைத்து பீல் சுதேச ஊழியர்களுக்கும் ரூ.300/– மதிப்பில் அழகான வேதபுத்தகம் வழங்கப்பட்டது. இந்திய வேதாகம சங்கம் குஜராத் கிளையிலிருந்து Rev.Dr. நிக்கோலஸ் பர்மார் சிறப்பு வருகை தந்தார்கள். இயேசு கிறிஸ்துவினுடைய அற்புதங்களையும், உவமைகளையும் மனப்பாடமாக ஒப்புவித்த சுசேத ஊழியர்களுடைய மனைவிமார்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இந்த கூட்டத்தின் செலவுகளுக்காக ரூ.3,92,000/– இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தின் மூலமாக வழங்கப்பட்டது. மேலும் சுதேச ஊழியர்கள் மற்றும் அலுவலக ஊழியர்களுக்கு ரூ.50,000/–க்கு வெகுமதி பொருட்கள் வழங்கப்பட்டது. இறுதிநாள் (06.11.2009) அன்று அனைவருக்கும் திருவிருந்து ஆராதனை பக்திவினையத்துடன் நடைபெற்றது. நம் ஊழியர்கள் தேவபிரசன்னத்தில் மகிழ்ந்து, களிப்புற்று மிகப்பெரிய தரிசனமாகிய 1 கோடி பீல் மக்கள் இரட்சிப்பின் திட்டத்தை நிறைவேற்ற புறப்பட்டுச் சென்றார்கள். சுதேச ஊழியர்களுடைய குடும்ப முகாமில் எந்தவித பிரச்சனைகள், கஷ்டங்கள், சோதனைகள் வராதபடிக்கு கர்த்தர் காத்துக்கொண்டார். அனைவருடைய பிரயாணங்களையும் கர்த்தர் வாய்க்கச் செய்தார். இந்த முகாமிற்காக ஜெபித்து தாங்கிய யாவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். குறிப்பாக சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்களுக்காக, இயேசு விடுவிக்கிறார் ஊழியங்களுக்காக நன்றி கூறுகிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

தேவ கிருபையால் இவ்வருடம் நவம்பர் 9 முதல் 13–ம் தேதி வரை 3 மாநிலங்களிலும் 5 இடங்களிலும் ஷாலோம் இலவச மருத்துவ முகாம் சிறப்பாக நடைபெற தேவன் கிருபை தந்தார்.

| தேதி | இடம் | மாநிலம் |
|---|---|---|
| 09.11.09 | மிஷன் ஆஸ்பத்தரி, தாகோத் | குஜராத் |
| 10.11.09 | ஜீவன்ஜோதி ஆஸ்பத்தரி, மேக்நகர் | மத்தியபிரதேசம் |
| 11.11.09 | ஹிரோலா கிராமம் | குஜராத் |
| 12.11.09 | கோய்க்கா, பிஜல்பூர் கிராமங்கள் | இராஜஸ்தான் |
| 13.11.09 | ஷாலோம் பவன், ஜாலோத் | குஜராத் |

இந்த முகாமிற்கு Dr. Abel Rajarathinam. Dr.Mrs. Jolly Abel Rajarathinam, Dr. Inba (RUHSA Vellore) தலைமையில் Sis. Shanthi Jeevan, Sis. Jeba Ternia இவர்களும் இணைந்து வந்து சிறப்பான சேவை புரிந்தார்கள். மேலும் CBN ஸ்தாபனத்திலிருந்து Bro.Sunil (Lab Technician) மற்றும் Bro. Pitchai அவர்களும் வந்து மிக அருமையாக நோய்களை பரிசோதிக்கவும், மருந்துகளை சிறப்பாக வழங்கியும் சேவை புரிந்தார்கள். குறிப்பாக CBN (Hydrabad) ஸ்தாபனத்தின் மூலமாக அனைத்து மருந்துகளும், இதர மருத்துவ சிகிச்சைக்கான உதவிகளும் வழங்கப்பட்டது. CBN ஸ்தாபனத்திற்காக அதனை பொறுப்பேற்று நடத்தி தந்த CBN பொறுப்பாளர் சகோ. சுனில் அவர்களுக்காக தேவனை துதிக்கிறோம். மேலும் நம் ஷாலோம் அலுவலக ஊழியர்கள், பயிற்சி பொறுப்பாளர்கள், Mr. Sunil (Dahod) அவர்களும் மொழிபெயர்ப்பு மற்றும் அனைத்து உதவிகளை செய்து தந்தார்கள். குறிப்பாக சகோதரி. வஹிதா தேவதாஸ் மற்றும் சகோ. ஜெயராஜ் அவர்கள் அனைத்து காரியங்களையும் தலைமைப் பொறுப்பெடுத்து மிக நேர்த்தியாக ஜெபத்துடன் வழிநடத்தினார்கள். இந்த முகாம் மூலமாக 2013 பேர்கள் மருத்துவ ஆய்வு, தரமான சிகிச்சை மற்றும் நல்ல மருந்து வகைகளை பெற்று சென்றார்கள். ஒவ்வொருவரும் தேவனுக்கு ஸ்தோத்திரம் கூறி மருத்துவ சேவைக்காக, தேவன் தந்த ஷாலோம் ஊழியத்திற்காக தேவனைத் துதித்து சென்றார்கள்.

குறிப்பாக மத்தியபிரதேசம் மாநிலத்தில் உள்ள காலாகேத் கிராமத்திலிருந்து கோவிந்த் என்ற பையன் Kidney-யில் 2.5Cm அளவு Stone-னால் மிகவும் வேதனைப்பட்டான். பெற்றோர்கள் மிக ஏழையாக இருந்தபடியால் ரூ.25,000/– Doctor Treatment- க்கு பண வசதி இல்லாமல் கண்ணீருடன் இருந்தார்கள். நம் ஷாலோம் டாக்டர்கள் தலைமையில் இலவசமாக ஆப்பரேஷன் நடைபெற்று பின் தொடர் பராமரிப்பும் CBN நிதி உதவியினால் நடைபெற்றது. நல்ல சுகத்துடன் குடும்பமாய் தேவனைத் துதித்து சாட்சியாக சென்றார்கள். தேவன்தாமே பிரயாணங்களை ஆசீர்வதித்தார். மருத்துவ பரிசோதனை, சிகிச்சை மற்றும் கொடுக்கப்பட்ட மருந்துகள் யாவற்றிற்காகவும் தேவனைத் துதிக்கிறோம். சேவைபுரிந்த அன்பான டாக்டர்கள், மருத்துவத்திற்கு உதவி செய்த அன்பு சகோதர, சகோதரிகளுக்கு குறிப்பாக CBN ஸ்தாபனத்திற்கு தேவ நாமத்தில் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் கூறுகிறோம்.

# ஷாலோம் இலவச மருத்துவ முகாம்





மருத்துவ பரிசோதனையில் Dr. Abel மற்றும் Dr. Inba ஆகியோர்






மருந்து மாத்திரைகள் ஜெபத்துடன் வழங்கப்படுகின்றன.



CBN ஸ்தாபனத்தின் சார்பில் வந்து
பரிசோதனை செய்யும் சகோ. பிச்சாயா



நோயாளிகளுக்கு ஊசிகள்
போடப்படுகின்றன.





நமது ஷாலோம் மருத்துவ முகாமில் கோவிந்த் என்ற சிறுவனுக்கு
சிறு நீரகத்தில் உள்ள கல்லை டாக்டர்கள் அறுவை சிகிச்சை மூலம்
அகற்றி சிறுவனை காப்பாற்றினார்கள். தேவனுக்கே மகிமை!


( ईशु )'' ... मैं इस पत्थर पर अपनी कलिसीया बनाऊँगा ... '' मत्ती 16 : 18
SHALOM SEVAK FAMILY CONFERENCE 2009

# ஷாலோம் கிராம ஆலய பிரதிஷ்டைகள்





அந்தர்வேலியா கிராம ஆலய பிரதிஷ்டை





பேடவ் கிராம ஆலயம்









கங்கேலா கிராம ஆலயம்

# ஷாலோம் திருமண்டலம் ஆரம்ப விழா

## ஷாலோம் பேராயர் பிரதிஷ்டை மற்றும்
## 77 ஷாலோம் போதகர்கள் பிரதிஷ்டை ஆராதனைகள்

தேவ கிருபையால் கடந்த 18 வருடங்களில் தேவன் பீல் மக்கள் மத்தியில் தந்த தரிசன பணி மூலமாக 400க்கும் அதிகமான பீல் ஆதிவாசி ஊழியர்களையும், 500க்கும் அதிகமான சபைகளையும் பல்லாயிர ஆத்துமாக்களை குடும்பங்களாக இதுவரை தந்துள்ளார்.

இரு வருடங்களாக ஜெபித்து, தேவனுடைய தாசர்கள் ஆலோசனைகளையும் ஏற்று நம் பணிகளை ஷாலோம் திருமண்டலம் உருவாக்கி பிரதிஷ்டை செய்ய கிருபை தந்துள்ளார். இந்த பரிசுத்த ஆராதனைகளை Anglican Churches, India மூலமாக **The Most Rt. Rev. Dr. Duraisingh James, The Most Rev. Dr. John Sathia Kumar, The Rt. Rev. John S.D. Raju** ஆகியோர் மிக நேர்த்தியாக நடத்தி தந்தார்கள். மேலும் **Rt.Rev. Dr. V. Devadass** அவர்கள் ஷாலோம் அத்தியட்சாதீனத்திற்கு முதல் ஸ்தாபக பேராயராக (Founder- Bishop) ஆக பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். மட்டுமன்றி தெரிந்தெடுக்கப்பட்ட 77 பீல் சுதேச ஊழியர்கள் முதல் ஷாலோம் போதகர்களாக பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டார்கள். குஜராத்தில் ஆனந்த் பட்டிணத்தில் உள்ள Berachah Centre மைதானத்தில் 20.11.09 வெள்ளிக்கிழமை தேவ நாமம் மகிமைக்காக நடைபெற்றது.

Shalom Board members Prof. C.S. Christopher, (Palayamkottai), Mr. Aruputharaj, (Tuticorin) Mr. Jebez Augustine & Fly (Nazareth) Pas.Gnanasekaran (Chennai) வந்து தலைமை தாங்கி சிறப்பாக நடத்தி தந்தார்கள். திரியேக தேவனுக்கு மகிமையுண்டாவதாக!

Shalom Diocese தனியாக Rt.Rev. Dr. V. Devadass மற்றும் Sis. Vahitha Devadoss தலைமையில் சபைக்கான ஒழுங்கு முறைகளும் நிறைவான அபிஷேகத்துடன் ஆராதனைகளும் நடத்தி செல்லப்படும். தேவனுக்கே துதிகனம், மகிமை உண்டாவதாக !

**முழு விவரங்களை அடுத்த ஜனவரி 2010 மலரில் விரிவாக வெளியிடுகிறோம்.**





ஷாலோம் திருமண்டல பேராயராக Rt. Rev. Dr.V. தேவதாஸ் அவர்கள் பிரதிஷ்டை செய்யப்படுகிறார்கள்.




ஷாலோம் திருமண்டல துவக்க விழா



77 பீல் ஆதிவாசி போதகர்களின் பிரதிஷ்டை



மகிமையான திருவிருந்து ஆராதனை

# ஷாலோம் சுதேச ஊழியர் குடும்ப முகாம்-2009






இயேசு விடுவிக்கிறார் மூலமாக ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட வேதாகமங்களுடன்





பீல் ஆதிவாசி மக்களின் கலாச்சார நடனம் அரங்கேற்றம்





இயேசுகிறிஸ்துவை நினைவுகூரும் பொருட்டு நடைபெறும் திருவிருந்து




சகோ. தேவதாஸ் அவர்களின்
குடும்பத்திற்கான சிறப்பு ஜெபம்



சிறப்பு உணவு பரிமாறப்படுகிறது.

# ஷாலோம் சுதேச ஊழியர் குடும்ப முகாம்-2009





தேவ மனிதர்களுக்கு வரவேற்பு






பாடல் மற்றும் ஆராதனை வேளை





அபிஷேக வேளை













சொந்த ஜனம் இரட்சிக்கப்பட அழுது ஜெபிக்கும் ஊழியர்கள்

# ஷாலோம் வாலிபர் முகாம்கள் - 2009

## இராஜஸ்தான் மாநிலம், கோய்க்கா மற்றம் கும்புரா கிராமங்களில் நடைபெற்ற முகாமில்



பெண்கள் முகாம்



ஆண்கள் முகாம்





செய்கைகளுடன் சிறப்பு பாடல்கள் பாடும் வேளை



அபிஷேக வேளை



சிறப்பு செய்தி



அர்ப்பணிப்பின் நேரம்



கலந்துரையாடல் வேளை

- ராஜஸ்தான் மாநிலம் கோய்க்கா கிராமத்தில் 20.10.2009 அன்று நடைபெற்ற வாலிபர் முகாமில் 200 பேர் கலந்துகொண்டார்கள்.
- ராஜஸ்தான் மாநிலம் கோய்க்கா கிராமத்தில் 21.10.2009 அன்று நடைபெற்ற வாலிபர் முகாமில் 100 பேர் கலந்துகொண்டார்கள்.
- ராஜஸ்தான் மாநிலம் கும்புரா கிராமத்தில் 23.10.09 அன்று நடைபெற்ற வாலிபர் முகாமில் 100 பேர் கலந்துகொண்டனர்.
- ராஜஸ்தான் மாநிலம் கும்புரா கிராமத்தில் 24.10.09 அன்று நடைபெற்ற வாலிபர் முகாமில் 95 பேர் கலந்துகொண்டனர்.

இந்த வாலிபர் முகாமில் துதி ஆராதனை, ஜெபம், அபிஷேகம், வசனம் Group Discussion, Bible Quiz, Action Song எல்லாம் சொல்லிக் கொடுக்கப்பட்டது. Bible Quiz Test நடத்தி வெற்றிப்பெற்றவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. எல்லாருக்கும் உணவு வழங்கப்பட்டது. சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் இரட்சிப்பு, பரிசுத்தம், அபிஷேகத்தைக்குறித்து செய்தியளித்து பிள்ளைகளுக்காக விசேஷ ஜெபம் செய்தார்கள். ஜெப வேளையில் ஆவியானவர் அபரிதமாக இறங்கிவந்தார். பிள்ளைகள் இரட்சிப்பையும், அபிஷேகத்தையும், சுகத்தையும் பெற்றார்கள். கெட்ட குமாரன் மனம் திரும்பிய நாடகம் வாலிபர்களின் உள்ளத்தை மிகவும் தொட்டது.

சகோதரி வஹிதாவுடன் இணைந்து Training Unit–ஐ சேர்ந்த ஊழியர்களும், ஊழியக்காரிகளும் 12 பேர்கள் இணைந்து இந்த Youth Camp–ஐ சிறப்பாக நடத்தினார்கள். வாலிபர் முகாமில் பங்குபெற்றதில் 300 பேர்களுக்கு மேலாக அபிஷேகம் பெற்றார்கள். ஞானம், புத்தி, அறிவிற்காக விசேஷ ஜெபம் ஏறெடுக்கப்பட்டதில் அநேகர் நாங்கள் பெற்றுக்கொண்டோம் என்று விசுவாசத்துடன் சாட்சிக்கூறினார்கள். நிச்சயமாக இந்த இளம் தலைமுறை கிருபையிலும் ஆசீர்வாதத்திலும், அபிஷேகத்திலும் சபையின் தூண்களாக சிறந்து விளங்குவார்கள் என்பதில் சந்தேகமில்லை. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

***<u>வாலிபர் முகாம்களில் கர்த்தர் செய்த அற்புதங்களில் சில....</u>***



**1.** Parsingh Ravath என்ற வாலிபன். இவனுடைய தகப்பன் பெயர் Kanthi Ravath இவன் Mundhadi கிராமத்தைச் சேர்ந்தவன். இவன் பந்து விளையாடிக்கொண்டிருந்த போது தோள்பட்டையில் பயங்கரமான வலி வந்தது. ஒரு வாரமாக கையை மேலே தூக்க முடியாமல் இருந்தது. வாலிபர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டதில் ஜெபவேளையில் சகோதரி. வஹிதா அவர்கள் ஜெபித்தபோது தேவன் அவன் கையைத்தொட்டு சுகமாக்கினார். இப்பொழுது அவன் கையில் வலி இல்லை. மேலே தூக்க முடிகிறது என்று சாட்சி கூறினான்.



**2.** Rassila என்ற வாலிப சகோதரி. இவளுடைய தகப்பன் பெயர் Hakra. இவள் Khenthipada கிராமத்தைச் சேர்ந்தவள். இவள் வலது கால் முழுவதும் 1 மாதமாக உணர்வில்லாமல் மரத்துபோய்விட்டது. கெட்ட சொப்பனங்களாலும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தாள். வாலிப சகோதரிகளின் கூட்டத்தில் கலந்துகொண்டதில் சகோதரி. வஹிதா அவர்கள் ஜெபித்தபோது அவளுடைய கால் சரியானது. நல்ல உணர்வு வந்துவிட்டது என்று அவள் சாட்சி கூறினாள்.

# பூலோகத்தில் ஒரு பரலோகம்



இந்த வருடம் 2009 நவம்பர் 3 முதல் 6 வரை (செவ்வாய் முதல் வெள்ளி வரை) குஜராத் மாநிலம் ஆனந்த் நகரில் நடைபெற்ற ஷாலோம் சேவாக் மிஷன் ஊழியர்களின் குடும்ப முகாமில் செய்தி கொடுக்க எனக்கு வாய்ப்பு கொடுத்தார்கள். என்னோடு இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தை சேர்ந்த சகோ. அப்பாத்துரை, சகோ. ஜெயக்குமார், சகோ. ஜெபராஜ் ஆகியோர் தேவ செய்தி வழங்கினார்கள். நிறைவான செய்தியாக சகோதரி. வஹிதா தேவதாஸ், சகோ. தேவதாஸ் அவர்களும் வழங்கினார்கள்.

பாடல் துதி ஆராதனையை பாஸ்டர் வில்சன் (சன்டிகார்) அவர்களும், பாஸ்டர் டேனியல் (மும்பை) அவர்களும் நடத்தினார்கள். கூட்டங்களின் சகல அம்சங்களும் பரிசுத்த ஆவியின் நிறைவுடனும், பரிசுத்த ஆவியானவரின் ஆளுகையுடனும் இருந்தது. மனந்திரும்பினவர்களுக்கு இரட்சிப்பின் சந்தோஷமும் உற்சாகமுள்ள ஆவியும் ஈவாக கொடுக்கப்படுகிறது என்று தாவீது ராஜா சொல்லுகிறாரே. (சங் 51 : 12) அவற்றை இந்த நான்கு நாட்களும் நான் கண்குளிர கண்டு கர்த்தரை ஸ்தோத்தரித்தேன்.

ஷாலோம் மிஷனெரிப்பணி மத்தியபிரதேசம், குஜராத், இராஜஸ்தான் ஆகிய மூன்று மாநிலங்களிலும் வாழுகிற ஒரு கோடி பீல் ஆதிவாசி ஜனங்கள் மத்தியிலே செய்யப்படுகிற ஊழியமாகும். இந்த ஊழியத்தின் பலனாக இதுவரை ஒரு லட்சம் பீல் மக்கள் இரட்சிக்கப்பட்டு விசுவாசிகளாய் மாறியிருக்கிறார்கள். சுமார் 430 சுதேச மிஷனெரிகள் எழும்பி நல்ல பயிற்சி கொடுக்கப்பட்டு ஊழியக்காரர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். சுமார் 520 சபைகள் ஸ்தாபிக்கப்பட்டு 214 கிராமங்களில் ஜெப ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளன.

நம் தமிழ்நாட்டில் ஊழியர்களை உருவாக்குவதே மகா கடினமான ஊழியம். இப்படியிருக்க பீல் மக்கள் மத்தியில் 430 ஊழியக்காரர்கள் எழுப்பப்பட்டு பயிற்சி கொடுக்கப்பட்டு தேவ ஊழியர்களாக சபைகளில் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை என் கண் கூடாக கண்டபோது ஆவியில் களிகூர்ந்தேன்.

பாடல் வேளையிலும், துதி ஆராதனை வேளையிலும், செய்தி வேளையிலும் இந்த ஊழியக்காரரும், அவர்களுடைய மனைவிமார்களும் அபிஷேகத்தில் நிறைந்து துள்ளுவதை பார்க்கும்போது அகமதாபாத்தில் என்ன நடக்கிறது? பூலோகத்தில் ஒரு பரலோகமோ என்று நான் வியந்து போனேன்.

ஷாலோம் ஊழியத்தின் தரிசனமாக 1000 சபைகளை ஸ்தாபிக்க வேண்டும் என்ற இலக்குடன் தீவிரமாக ஊழியம் செய்ய சகோ. தேவதாஸ், சகோதரி. வஹிதா தேவதாஸ் மற்றும் அவர்களுடைய உடன் ஊழியர்களை நான் மனப்பூர்வமாய் வாழ்த்துகிறேன். இந்த ஊழியம் முற்றிலும் விசுவாசத்தில் நடத்தப்படுகிறது. இந்த ஊழியத்தின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிக்கிறேன். நன்கொடையாளர்கள் ஏராளமாய் எழும்பி, மிஷனெரிகளுடைய தேவைகள் சந்திக்கப்பட வாழ்த்துகிறேன்.

***Pr. ஜான்ராஜ்,*** கர்மேல் சபை, திருத்தங்கல் (சிவகாசி)

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



மாணவியின் பெயர் : **மனீஷா டாமோர்**

தகப்பனார் பெயர் : கோர்சிங் டாமோர்

தாயார் பெயர் : சுனிதா டாமோர்

பிறந்த நாள் : 01.06.1991

படிக்கும் வகுப்பு : 11th Std.,

சொந்த ஊரின் பெயர் : வக்ரேலா

மாவட்டம் : தாகோத்

மாநிலம் : குஜராத்

**மாணவியின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–**

மனீஷா டாமோர் ஷாலோம் விடுதியில் தங்கி படித்து வருகிறாள். இவளுடைய பெற்றோர் இயேசுவை அறியாதவர்களாய் வாழ்க்கையில் சமாதானமில்லாமல் இருளில் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். பிறகு சில நாட்கள் கழித்து இவளுடைய தம்பி மோகன் டாமோர் காய்ச்சலினால் அதிகமாக கஷ்டப்பட்டான். அநேக மருத்துவரிகளிடம் சென்றும் அவனுக்கு சுகம் கிடைக்கவில்லை. இந்நிலையில் அவர்கள் இயேசுவைப் பற்றி கேள்விப்பட்டு ஆலயத்திற்கு அழைத்து சென்றார்கள். ஆலயத்திலுள்ள விசுவாசிகள், ஊழியர் அனைவரும் இணைந்து ஊக்கமாக ஜெபித்தார்கள். ஜெபித்தபோது தேவன் பெரிய அற்புதத்தை செய்தார். தொடர்ந்து இவர்கள் ஆலயத்திற்கு சென்று குடும்பத்தில் அனைவரும் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு ஷாலோம் ஊழியத்தில் இணைந்து குடும்பமாக ஊழியம் செய்து வருகிறார்கள்.

**திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:-** நன்றாக படிப்பாள். விளையாட்டில் ஆர்வமுண்டு,

**ஜெபியுங்கள்:-** நல்ல முறையில் படிக்க தேவன் விசேஷித்த ஞானத்தைத் தரவும், நல்ல ஆரோக்கியத்திற்காகவும், குடும்பத்தின் ஆசீர்வாதங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

**இச்சிறுமியைத் தாங்குபவர்** **Mr. Inbaraj,** Coimbatore.

**நீங்களும் மாதம் ரூ. 400/– கொடுத்து ஜெபித்துத் தாங்க முன் வரலாம்.**
**உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்குவதற்கு அறிமுகப்படுத்தலாம்.**

**Rev. T.D. ராஜன் *Lalgudi, Trichy Dist.* அவர்களின்**

***பணித்தள பார்வை..***

***கர்த்தர் நல்லவர்!***

நான் கடந்த 09.10.2009 முதல் 25.10.09 வரை 17 நாட்கள் குஜராத்தில் தங்கியிருந்து, ஷாலோம் மிஷனெரி ஊழியங்களை, குஜராத், இராஜஸ்தான், மத்தியபிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் சென்று பார்க்கவும், பங்குபெறவும் கிருபை செய்த தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். சகோ. தேவதாஸ் அவர்களும், சகோதரி. வஹிதா தோவதாஸ் அவர்களும் கடந்த 18 வருட தியாக ஊழியத்தால் இந்த 3 மாநிலங்களிலும் 500–க்கும் அதிகமான சபைகளையும், ஊழியர்களையும் உருவாக்கியிருக்கிறார்கள். நான் வானியவாவ் (Guj), ஹிரோலா (Raj), கோப்க்கா (Raj) கோப்க்கா (M.P) மேந்திகேடா (M.P) , ரூன்கேடா (M.P) ஆகிய சபைகளை நேரில் சென்று பார்த்தேன். ஆராதனையில் பங்குபெற்றேன்.

***பாடல் ஆராதனை***

சபைகளில் பலமணி நேரங்கள் பாடுகிறார்கள். சப்தமாக பாடுகிறார்கள். ஒருவர் கூட தவறாமல் பாடுகிறார்கள். பாடினால்தான் ஆசீர்வாதம் கிடைக்கும் என்று முழுமனதுடன் நம்பி பாடுகிறார்கள். ஆவியில் நிறைந்து, அந்நியபாஷையில் பேசி ஆராதிக்கிறார்கள். தேவன் இந்த ஜனத்தின் மத்தியில் மகிமைப்படுகிறார்.

***வேதத்தின் வெளிச்சம்***

ஊழியர்களுக்கு பயிற்சி, கருத்தரங்குகள், குடும்ப முகாம்கள், வாலிபர்களுக்கு தனி முகாம்கள், வாலிப பெண்களுக்கு தனி முகாம்கள் இதிலும் குறிப்பாக மாநிலம், மண்டலம் என பிரித்து வேலை நடைபெறுகிறது. எப்படியாவது இந்த பயிற்சிகள் மூலம் ஷாலோம் சபைகளை வேதத்தின் வெளிச்சத்தில் நடக்க செய்துவிடவேண்டும் என்பதுதான் தேவன் இவர்களுக்கு கொடுத்துள்ள மாபெரும் திட்டம். குறிப்பாக 2 வாலிப முகாமில் சென்று பார்த்தேன். 13 வயது முதல் 20 வயது வரை 200 பேர் வரிசை வரிசையாக அமர்ந்திருந்தனர். அந்த பிஞ்சு முகங்களை பார்த்தபோது என் கண்களில் கண்ணீர் வந்தது. பயிற்சிக்கு ஒரு Training Team இருக்கிறார்கள். Skit, Dance இதை ஷாலோம் அலுவலக ஊழியர்கள் உற்சாகமாக செய்கிறார்கள். சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள் செய்தி கொடுத்து அபிஷேகத்துக்காக ஜெபிக்கிறார்கள். வாலிபர்கள் அபிஷேகம் பெற்று ஆவியில் நிறைந்து ஜெபிக்கிறார்கள். மெய்யாகவே இது தேவனுடைய பார்வையிலும், அருமையான ஊழியம் என்று நம்புகிறேன்.

**சிறுவர் ஊழியம்**

Compassion Project மூலமாக ஹிரோலா, அந்தர்வேலியா, ஜெரி ஆகிய இடங்களில் சிறுவர், சிறுமியருக்கு ஊழியம் நடக்கிறது. நான் ஹிரோலா, அந்தர்வேலியா கிராமங்களில் Caruna Bal Vikas மூலமாக நடைபெறும் Project–ல் சென்று பார்த்தேன். காலையில் 8 மணி முதல் 11 மணி வரை வகுப்புகள் நடக்கிறது. பள்ளி பாடம், வேதபாடம், உணவு கொடுத்து 11 மணிக்கு பள்ளிக்கு அனுப்பப்படுகிறார்கள். இதில் பங்கெடுக்கும் பிள்ளைகள் நிச்சயம் விசுவாசியாக, ஊழியர்களாக வருவார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

**ஜெபம்.**

முழு இரவு ஜெபங்கள், உபவாச ஜெபங்கள் மற்றும் தினமும் ஷாலோம் அலுவலகத்தில் ஜெபம், வெள்ளிக்கிழமை சிறப்பு ஜெபம் என்று ஜெபங்கள் ஏறெடுக்கப்படுகிறது.

**நமது பங்கு.** மிஷனெரி எழும்பவேண்டும் என்று ஜெபிக்கிறோம். மிஷனெரிகளின் பாதுகாப்புக்காக ஜெபிக்கிறோம். மிஷனெரி ஸ்தாபன பணத்தேவைகளுக்காக ஜெபிக்கிறோம் நல்லது. நான் ஷாலோம் ஊழியத்தை நேரில் இருந்து பார்த்தபோது ஊழியர்களுக்கு மாதாந்திர ஊதியம், அலுவலர்களுக்கு ஊதியம், பல நூறு கிலோ மீட்டர் பிரயாண செலவுகள், பயிற்சியளிக்க செலவு, பயிற்சி பெறுவோருக்கு மதிய உணவு செலவு என்று பல லட்சங்கள் மாதந்தோறும் செலவிடப்படுகிறது. இன்னும் இவர்கள் பணத்தேவைகள் முழுமையாக சந்திக்கப்பட்டால், ஓரிரு ஆண்டுகளில் ஷாலோம் ஊழியங்கள் மூலம் 3 மாநிலங்களிலும் மாபெரும் எழுப்புதல் வந்துவிடும் என்பதில் சந்தேகமே இல்லை. எங்கள் சபையின் பங்கை நிறைவேற்ற வேண்டும் என்ற தீர்மானத்துடன் இதை எழுதிக்கொடுத்துவிட்டு தமிழ்நாடு திரும்புகிறேன். தேவராஜ்யம் கட்டப்படுவதாக! தேவனுக்கே மகிமையுண்டாவதாக!

***Pas. T.D. Rajan,** Lalgudi*


## ஜெபக் குறிப்புகள்



- கடந்த நவம்பர் 20–ம் தேதியன்று தேவனால் உருவாக்கப்பட்ட ஷாலோம் திருமண்டலத்திற்காக தேவனைத் துதியுங்கள். இந்த ஷாலோம் திருமண்டலம் உலகமெங்கும் உள்ள சபைகளுக்கு முன்மாதிரியாக அமையவும், பரிசுத்த ஆவியினவரால் நடத்தப்படவும் பாரத்தோடு ஜெபியுங்கள்.
- வருகிற கிறிஸ்துமஸ் நாட்களில் நம்முடைய பீல் விசுவாசிகள் குறைந்தது 2 குடும்பத்திற்கு நற்செய்தி சொல்லி இயேசுவண்டையில் நடத்த கற்றுக்கொடுத்துள்ளோம். அதன்படி பல புதிய குடும்பங்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.
- கிறிஸ்துமஸ் நாட்களில் நமது ஊழியர்களுக்கும் அவர்கள் மனைவிமார்களுக்கும், பீல் ஆதிவாசி சிறு பிள்ளைகளுக்கும் புத்தாடை வெகுமதிகளை கொடுத்து உற்சாகப்படுத்த உள்ளோம். அதற்கான தேவை ரூ.6 லட்சம் கிடைக்கப்பெற ஜெபியுங்கள்.
- கிறிஸ்துமஸ் நாட்களில் நமது பீல் விசுவாசிகளின் தேவைகள் மற்றும் பீல் சபைகளின் தேவைகள், ஊழியர்களின் தேவைகள் சந்திக்கப்படவும், எல்லோருக்கும் கிறிஸ்துமஸ் நாட்கள் சந்தோஷமாக அமையவும் ஜெபியுங்கள்.
- கிறிஸ்துமஸ் நாட்களில் நம்முடைய சபைகளுக்கு விரோதமாக எந்த எதிர்ப்புகளும் வராதபடிக்கு தேவன் நல்ல பாதுகாவலை கொடுக்கும்படியாக ஜெபியுங்கள்.
- டிசம்பர் 17 குஜராத், 19 மத்தியபிரதேசம், 21 இராஜஸ்தான் ஆகிய நாட்களில் நடைபெற உள்ள கிறிஸ்துமஸ் மேளாவுக்காக ஜெபியுங்கள். அநேக விசுவாசிகள் இதில் பங்குபெற்று தேவ ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள ஜெபியுங்கள்.
- புதுவருட ஆசீர்வாதங்களுக்காகவும், நமது பீல் சுதேச ஊழியர்களுக்கு நடைபெற உள்ள புதுவருட ஆசீர்வாதக் கூட்டத்திற்காகவும் மேலும் அனைத்து சபைகளிலும் நடைபெறுகிற வாக்குத்தத்த ஆராதனைகளுக்காகவும் ஜெபியுங்கள்.
- ஜனவரி மாதத்தில் B.Th., Exam எழுத உள்ள நம்முடைய பீல் சுதேச ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்.
- சகோ. தேவதாஸ், சகோதரி. வஹிதா தேவதாஸ், பிள்ளைகள் டைட்டஸ், ஷாலோம், ஷெக்கினாவுக்காக ஜெபியுங்கள்.

# ஜாண் ஹண்ட்

மிஷனெரி முன்னோடிகள்



1812ஆம் ஆண்டு இங்கிலாந்திலுள்ள லின்கன்ஷயர் (Lincoinshire) என்ற சிற்றூரில் பிறந்த ஜாண் ஹண்ட் (John Hunt), 10வது வயதில் பள்ளிப்படிப்பை நிறுத்திவிட்டு, விவசாய வேலைகளைச் செய்து வந்தார். விவசாய வேலைகளையும் திறம்பட செய்ய முடியாததால், அவரது நண்பர்கள் அவரை கேலி செய்தனர். இந்த சூழ்நிலையில் அவருடைய நண்பர் வீட்டில் நடைபெறும் ஜெபக்கூடுகைக்கு செல்ல ஆரம்பித்தார். இதுவரை அவர் வாழ்க்கையில் கிறிஸ்துவுக்கும் ஆவிக்குரிய காரியங்களுக்கும் இடமில்லாதிருந்தது. அவருடைய கெட்ட பழைய நண்பர்களின் கூட்டுறவினால் அதிகம் சோர்ந்து போயிருந்தார். இந்த ஜெபக் கூடுகையின் பாடல்கள், செய்திகள், ஜெபங்கள் ஆகியவை இவர் வாழ்வை மாற்ற ஆரம்பித்தன. ஒரு நாள் கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்.

ஆண்டவரின் அன்பை உணர்ந்த ஜாணுக்கு, ஆப்பிரிக்க கண்டத்திற்கு மிஷனெரியாக செல்ல வேண்டும் என்ற எண்ணம் வலுப்பெற்றது. எனவே அதற்காக தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்ள விரும்பினார். ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து கொண்டிருந்த ஜாண் பல இடங்களில் ஜெபக்கூட்டம் நடத்திவந்தார். அவருடைய எளிய வாழ்வு, தெளிவான செய்தி பலரை ஆண்டவருக்குள் வழி நடத்தியது. தனது நண்பர்களிடம், தான் ஆப்பிரிக்காவிற்கு மிஷனெரியாக செல்லும் இலட்சியத்தைக் கூறினார். அவர்களும் அவரை தைரியப்படுத்தி, ஹாஸ்டனில் (Hasten) உள்ள மெதடிஸ்ட் வேதாகமப் பள்ளியில் (Methodist Bible College) இரண்டு வருட வேதாகம படிப்பை படிக்க உதவினர். 10 வயதில் படிப்பை நிறுத்திவிட்ட ஜாணுக்கு படிக்க கடினமாக இருந்தாலும், ஆப்பிரிக்க தேசத்து தரிசனம் அவரைச் சோர்ந்து போகாமல் படிக்கச் செய்தது. படித்து முடித்தவுடன் அவரது மிஷனெரிய இயக்கத்தலைவர் "நீ உலகத்திலே மோசமான காட்டுமிராண்டிகள் வாழும் பிஜி தீவுகளுக்குச் செல்ல ஆயத்தமாயிருக்கிறாயா?" என்று கேட்டார். அதற்கு ஜாண், "என் ஆண்டவர் அனுப்பும் எந்த இடத்திற்கும் போக நான் ஆயத்தம்." என்று பதிலளித்தார். தனது வாழ்வின் மிஷனெரி பணிக்கான இடம் ஆப்பிரிக்கா அல்ல, பிஜி தீவுகளே என்பதை அப்பொழுது அறிந்துகொண்டார். ஆஸ்திரேலியா கண்டத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள பிஜி தீவுகள் (Fiji Islands) மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தது. தனக்கு நியமிக்கப்பட்ட பெண்ணான ஹேனாவிடம் (Hennah) பிஜி தீவுகளுக்குப் போகவேண்டும் என்று சொன்னபோது அவளும் சம்மதித்தாள்.

ஜாண் – ஹேனா தம்பதியினர் 1839 ஆம் ஆண்டு மே மாதம் 8ம் தேதி இங்கிலாந்து தேசத்தைவிட்டு, ஆறு மிஷனெரிகளுடன் சிட்னியை (Sydney) நோக்கி கப்பற்பயணம் மேற்கொண்டனர். கஷ்டமான பயணத்தில் ஹேனா சுகவீனமடைந்தார். இருப்பினும் தேவகிருபையால் சிட்னியை வந்து சேர்ந்தனர். அங்கிருந்து சிறிய மரப்படகில் பிஜி தீவு நோக்கி சென்றனர். ரிவா (Rewa) என்ற தீவிற்கு ஜாண் – ஹேனா அனுப்பப்பட்டனர். அங்கு மிஷனெரியாக இருந்த கிராஸ்–வுடன் (Cross) சேர்ந்து கொண்டனர். அத்தீவு மக்கள் மிகக் கொடூர குணமுடையவர்கள். மனித மாமிசங்களையும் சாப்பிடும் பழக்கமுடையவர்கள். செத்துப்போன ஆவிகளுக்கு பயப்படுகிறவர்கள். கணவன் இறந்துவிட்டால் அந்த ஆவி


சுற்றிக் கொண்டிருக்கும் என மனைவியையும் கொன்று கணவனுடன் புதைத்துவிடுவார்கள். வயதானவர்களையும், நோயாளிகளையும், பயனற்றவர்களையும் கழுத்தை நெறித்தோ, உயிருடன் மண்ணில் புதைத்தோ கொன்று விடுவார்கள். இப்படி மூடப்பழக்கமுடைய காட்டு மிராண்டிகளாயிருந்தார்கள்.

முதலாவது அவர்களுடைய பாஷையை கற்றுக்கொள்ள தீர்மானித்து, ஆறு வாரங்களில் புலமைப்பெற்று பிஜியன் (Fijian) மொழியில் வேதக் கதைகளை எழுதி, கூடி வந்தவர்களுக்கு போதிக்க ஆரம்பித்தார். வெள்ளை மனிதன், தம்முடைய மொழியை தெளிவாக பேசுவதைக் கண்ட மக்கள் ஆர்வமுடன் இயேசுவை ஏற்றுக் கொள்ள ஆரம்பித்தனர். இப்படி 40 பேருக்கு மேல் வர ஆரம்பித்தனர். படிப்படியாக 100 பேர் கூடி வந்தனர். அங்குள்ள குறுநில மன்னன் இதை எதிர்த்தான். ஒரு நாள் கூட்டத்தில் மன்னனின் ஆட்கள் கற்களை வீசி காயப்படுத்தினர். ஜானுடைய கையிலும் பலத்த காயம் ஏற்பட்டது. மேலும் எதிர்ப்பாளர்கள் மிஷன் வீட்டையும் கொள்ளையடித்தார்கள். ஜானின் குடும்பத்திற்கு ஆபத்துகளும் மரணமும் நேரிடும் வாய்ப்புகள் அதிகமாக இருந்தது. ஜான் கெம்பீரமான தோற்றமுடையவரும் மனவலிமை மிக்கவருமாயிருந்தார். எனவே எவரும் இவரை எதிர்க்கமுடியவில்லை. அக்குறுநில மன்னன் ஆறுமாதத்திற்குள்ளாகவே சுவிசேஷத்தைக் கேட்க ஆரம்பித்தான்.

பிஜி தீவின் வடபகுதியிலுள்ள சோமோ சோமோ (Somo Somo) தீவுக்கு அனுப்பப்பட்டார். இவருடன் லைத் (Dr. Lyth) என்ற மருத்துவ மிஷனெரியும் சென்றார். மிஷனெரிகளை அத்தீவு மன்னன் அன்புடன் வரவேற்றான். ஆனால் அவர்கள் வரவேற்பு மிஷனெரிகளின் பொருட்களை கொள்ளையடிக்கும் நோக்கமாயிருந்தது. தொடர்ந்து பிஜியன் மொழியை கற்று தேர்ச்சியடைந்தார். அதிவிரைவில் பிஜியன் மொழியில் வேதாகமத்தை மொழிபெயர்க்க ஆரம்பித்தார். இதற்காக அச்சு இயந்திரத்தை இங்கிலாந்திலிருந்து வரவழைத்து, விவா (Viwa) என்ற இடத்தில் அச்சுக்கூடத்தை நிறுவினார். விவாவிலும், பிஜியனில் பல இடங்களிலும் மருத்துவமனைகள் நிறுவப்பட்டது. ஹேனா ஜான் பெண்கள் மத்தியில் பணிபுரிய ஆரம்பித்தார். பெண்களுக்கு சமுதாயத்தில் மதிப்போ உரிமையோ இல்லாதிருந்தது. அவர்களை ஆண்டவருக்குள் வழிநடத்தினதால் அநேகர் இயேசுவை ஏற்றுக்கொண்டனர். அத்தீவில் மிகக்கொடூரமான டுக்கிலாகிலா (Tuikilakila) என்பவனுக்கு மருத்துவ உதவி செய்து இயேசுவின் அன்பை வெளிப்படுத்தினபடியால், தன் கொடூர குணத்தை விட்டான். கடைசியாக டுக்கிலாகிலா தொழுநோயால் பாதிக்கப்பட்டு, தனியாக வைக்கப்பட்டான். மிஷனெரிகள் அவனைச் சந்தித்து சுவிசேஷம் கூறினதால், அவன் இயேசுவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்துவுக்குள் மரித்தான். பிஜியன் எல்லா தீவுகளிலும் சென்று ஊழியம் செய்தார்கள். உடல் பலவீனப்பட்டாலும், அவர் பிஜி தீவை விட்டுச் செல்ல விரும்பவில்லை. அவரை அதிகம் எதிர்த்த உள்ளூர் மனிதன் வரானி (Varani) வேதத்தை கற்றுக்கொள்ள ஆர்வம் கொண்டு ஜானிடம் ஒருநாள் வந்தான். அவனுக்கு ஜான் இயேசுகிறிஸ்துவின் மரணத்தையும், இரட்சிப்பையும் போதித்தார். அவனும் இயேசுவை ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் பெற்றான். அவர்கள் மனிதர்களை கொன்று தின்பதற்காக உபயோகிக்கும் ஒரு கல் இருந்தது. அந்த கல்லை ஆலயத்திற்கு முன்பு நிறுத்தி ஞானஸ்நானத்திற்காக உபயோகிக்க வேண்டுமென வரானி கேட்டுக் கொண்டான். ஜானின் ஊழியத்திற்கு மிகவும் உதவியாக இருந்தான்.

பிஜி தீவு மக்கள் மூடபழக்கம், நரமாமிசம் உண்பதிலிருந்து விடுதலை பெற்று வந்தனர். ஜானின் உடல் அதிக பலவீனப்பட ஆரம்பித்தது. 1848ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 9ஆம் தேதி தேவனிடத்தில் சேர்ந்தார். 36 வயதே நிரம்பிய ஜான் ஹன்ட்ரிவா தீவில் 10 வருடம் உழைத்தபின் தேவ சமூகத்தைச் சென்றடைந்தார். இவரது கல்லறை இங்கிலாந்தில் உள்ளது. இன்று 90 சதவீத பிஜி தீவு மக்கள் கிறிஸ்தவர்களாக இருக்கின்றனர்.

## ஷாலோம் ஊழியத்தின்
## E-mail & SMS சேவைகள்




இன்பர் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

இந்த பரந்து விரிந்த பிரபஞ்சத்தில் விஞ்ஞான ரீதியான தொழில் நுட்ப வளர்ச்சி முக்கியமான இடத்தினை வகிக்கிறது என்பதில் எந்த ஒரு சந்தேகமுமில்லை. அந்த வகையில் இன்று உலகத்தில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருப்பது மொபைல் போனாகும் (Mobile Phone). இந்த மொபைல் போனில் பயன்படுத்தப்படும் SMS (Short Message Service) என்ற சேவை தொலை தொடர்புத் துறையில் பெறும் பங்கை வகித்து வருகிறது. இந்த SMS (Short Message Service) சேவையை நாமும் தேவனுடைய ராஜ்ஜியம் கட்டும் பணியில் பயன்படுத்தலாம்.

இந்த SMS சேவையை ஷாலோம் ஊழியங்களில் அறிமுகப்படுத்துகிறோம். முதலாவதாக இதன் முலம்

1. ஜெபக்குறிப்புகள்.
2. வாக்குத்தத்த வசனங்கள்.
3. காணிக்கை பெற்றுக் கொண்டதின் விபரங்கள்.
4. பிறந்த நாள் / திருமண நாள் வாழ்த்துக்கள்.

போன்ற சேவைகளை இலவசமாக உங்களுக்கு வழங்க பிரயாசப்படுகிறோம். இந்த SMS சேவைகளை நாம் பயன்படுத்தும்போது நேரம் மற்றும் பணச் செலவுகளை மிச்சப்படுத்தலாம். மேற்கண்ட விபரங்களை நாங்கள் உங்களுக்கு SMS மூலமாக அனுப்புகிறோம் என்பதை தெரியப்படுத்துகிறோம்.

ஆகவே இந்தச் சேவைக்காக உங்களுடைய மொபைல் போனின் எண்ணை எங்களுக்கு **09345675468** என்ற எண்ணுக்கு SMS மூலமாக அனுப்புங்கள்.

### *எங்களது E-mail முகவரி & Website :*

**email : info@shalommission.in,**

**Website : www.shalommission.in**

# ஊழியத்தின் தேவைகளும் உங்கள் பங்கும்

- ❖ மாதந்தோறும் ரூ.2000/-கொடுத்து பீல் சுதேச ஊழியரை ஜெபித்து தாங்க முன் வரலாம்.
- ❖ மாதந்தோறும் ரூ.1000/- கொடுத்து Shalom Mission Partner-ஆக முன் வரலாம்.
- ❖ மாதம் ரூ.500/- கொடுத்து ஊழிய சார்பு தேவைகள் சந்திக்கும்படி ஒரு கிராமத்தில் நடைபெறும் ஊழியத்தை தாங்கலாம்.
- ❖ மாதம் ரூ.400/- கொடுத்து ஆதிவாசி சிறுவர் ஒருவரை பராமரிக்க முன் வரலாம். (ஒரு ஆண்டிற்கு ரூ. 4,800/–)
- ❖ ரூ.60,000/- கொடுத்து ஒரு கிராம ஆலயத்தைக் கட்டிக் கொடுக்கலாம்.
- ❖ மூத்த சுதேச ஊழியர்களுக்கு ரூ.35,000/-மதிப்பில் இரு சக்கர வாகனம் **(Two Wheeler)**  வாங்கிக் கொடுக்க முன் வரலாம்.
- ❖ பீல் சுதேச ஊழியர்களுக்கு ரூ.2,500/-மதிப்பில் மிதிவண்டி  **(Cycle)** வாங்கிக் கொடுக்க முன் வரலாம்.
- ❖ பணித்தளத்தில் நடைபெறும் கூட்டங்கள், மூப்பர்கள் முகாம், சுதேச ஊழியர்கள் பயிற்சி ஆகியவற்றிற்கான செலவினைப் பொறுப்பெடுத்துக் கொள்ளலாம்.
- ❖ ரூ.80/-வீதம் குஜராத்தி மற்றும் ஹிந்தி மொழிகளில் வேதாகமங்கள் பீல் விசுவாசிகள் வாங்க உதவ முன்வரலாம். (5550 வேதப்புத்தகங்கள் தேவை)
- ❖ அனுதினமும் பீல் ஆதிவாசி மக்கள் இரட்சிப்பிற்காக மறவாமல் ஜெபியுங்கள்.
- ❖ மாதந்தோறும் உங்களால் முடிந்த காணிக்கையை அனுப்புங்கள்.
- ❖ மற்றவர்களுக்கும் ஊழியத்தை அறிமுகப்படுத்துங்கள்.

இந்தப் பத்திரிக்கையை நீங்கள் இணையதளத்தின் மூலமாகவும் வாசித்து தேவனை மகிமைப்படுத்தலாம். மட்டுமல்லாமல் உங்கள் நண்பர்கள் உறவினர்களுக்கு இமெயில் மூலமாகவும் அறிமுகப்படுத்த அன்பாய் கேட்கிறோம்.

**http://www.shalommission.in/magazineview.asp**

வழக்கமாக அரிசியை ஏற்றுமதி செய்தே பழக்கப்பட்ட இந்தியா கிட்டத்தட்ட 20 வருடங்களுக்குப் பிறகு முதல் முறையாக அரிசியை இறக்குமதி செய்யவுள்ளது. தொடர் வறட்சி, வெள்ளம், இயற்கையின் சீற்றம் ஆகியவற்றால் அரிசி உற்பத்தி பாதிக்கப்பட்டு, பற்றாக்குறையை ஏற்படுத்திவிட்டதாக மத்திய அரசு கூறுகிறது.

அமெரிக்க அதிபர் ஒபாமா அவர்கள் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்குக்கு வரும் 24ம் தேதி வெள்ளை மாளிகை வளாகத்தில் சிறப்பு விருந்து கொடுத்து கவுரப்படுத்தவுள்ளார். அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி, இந்திய வம்சாவளியினர், லூசியான கவர்னர் பாபி ஜின்டால் உள்ளிட்ட 120 வி.ஐ.பி.கள் உட்பட 400 பேர் இந்த விருந்தில் கலந்து கொள்கின்றனர்.

உலகின் மிக ஆபத்தான நாடுகள் என்ற பட்டியலில் ஆப்கானிஸ்தானை முதலிடத்தில் நிறுத்தியுள்ளது ஐக்கிய நாடுகள் சபை. சர்வதேச குழந்தைகள் தினத்தை ஒட்டி ஐ.நாவின் சிறுவர் நிதியத்தியமான யுனிசெப் வெளியிட்டுள்ள அறிக்கைபட்டியலிலே இதனை தெரிவிக்கிறது. உலகில் வாழ்வதற்கு மிக அச்சுறுத்தலானதும், ஆபத்தானதுமான நாடாக ஆப்கானிஸ்தான் விளங்குவதாகவும், குறிப்பாக பெண் குழந்தைகளுக்கு வாழவே முடியாத நாடாக ஆப்கானிஸ்தான் மாறிவருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது யுனிசெப். பிறக்கும் 1000 பெண் குழந்தைகளில் 250 மரணிக்கப்படுவதாகவும், அங்கு தொடர்ந்து அதிகரித்துவரும் தீவிரவாத செயல்களும், மக்களின் மனிதத்தன்மை மரணித்து வருவதுமே இதற்கு காரணமெனவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

ஓசோன் படல ஓட்டை காரணமாக உலக சுற்றுச்சூழல் பல்வேறு அபாயங்களைச் சந்தித்து வருகிறது. இந்த நிலையில், ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள், ஓசோன் படல ஓட்டை சுருங்கி வருவதாக தெரிவித்துள்ளனர். இது இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் முற்றிலும் மறைந்து போய்விடும் எனவும், இதனால் கிழக்கு ஆஸ்திரேலியாவில் வறட்சி நிலை மாறி நல்ல மழைப் பொழிவு கிடைக்கும் எனவும் ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.


## எங்களுடன் தொடர்பு கொள்ள

| தலைமை அலுவலகம் | பணித்தள அலுவலகம் |
| --- | --- |
| **Sharing Love Mission**<br>168/5, Caldwell Colony, 3rd Street,<br>**Tuticorin - 628 008.** Tamil Nadu.`<br>Phone: 0461 - 2375468<br>Cell : 9345675468 | Bro. V. Devadass<br>Founder & General Secretary<br>Shalom, Christian Kamdar Society,<br>Dahod - 389 151, Gujarat<br>Ph. : 02673 - 325468<br>Cell : 09377445468 |

email : info@shalommission.in, Website : www.shalommission.in

கிராம ஆலயம் **பேடவ் துலியா** ராஜஸ்தான்



இராஜஸ்தான் மாநிலத்தில் பான்ஸ்வாடா மாவட்டத்தில் பேடவ் என்ற கிராமம் அமைந்துள்ளது. இந்த கிராம மக்கள் குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கிறார்கள். வீட்டிற்கு வீடு சாராயம் காய்ச்சி குடிப்பதும், விற்பதும், திருடுவதும் இவர்களுடைய தொழில். தித்தாபாய் என்பவருடைய குடும்பம் இந்த கிராமத்தில் நல்ல வசதியுடன் வாழ்ந்த குடும்பம். ஆனால் இவர்கள் பில்—சூனியத்தினாலும், பிசாசினாலும் தாக்கப்பட்டு கொஞ்ச காலத்திற்குள் எல்லா ஆஸ்திகளையும் விற்று தரித்திர நிலையை அடைந்தார்கள். அனைத்து மிருக ஜீவன்களும் மரித்துவிட்டன. எல்லா மந்திரவாதிகளையும் அழைத்து மந்திர பூஜை செய்தும் பலன் கிடைக்கவில்லை. பின்பு கும்புரா என்ற கிராமத்தில் நன்து ஷாலோம் சபை இருப்பதையும் இயேசுவின் நாமத்தில் நடைபெறுகிற அற்புதங்களையும் கேள்விப்பட்டு ஆலயத்திற்குச் சென்று இயேசுவை ஆராதித்தார்கள். இயேசுவை ஏற்றுக் கொண்ட அன்றைய தினத்திலிருந்தே அவர்களைக் கட்டி இருந்த பில்லிசூனிய ஆவிகள் விலக ஆரம்பித்தன. அவர்கள் வீட்டில் சமாதானம் நிலவியது. இழந்து போன அனைத்து ஆஸ்திகளும் திரும்ப கிடைக்கப் பெற்றார்கள். அவருடைய மகன் பாதர் டோடியார் அவர்களும் இயேசுவை ஏற்றுக் கொண்டு இரட்சிப்பைப் பெற்றார். அபிஷேகம் பெற்று தன்னை ஊழியம் செய்ய அர்ப்பணித்து, பேடவ் கிராமத்தில் ஊழியம் செய்ய ஆரம்பித்தார். இதுவரை 30 குடும்பங்கள் இயேசுவை சொந்த இரட்சகராய் எற்றுக் கொண்டுள்ளார்கள். தற்போது இங்கு சகோ. பாதர்டோடியார் அவர்கள் ஊழியம் செய்து வருகிறார். ஏற்கனவே இருந்த கிராம ஆலயம் தற்போது பெரிதாக விரிவாக்கம் செய்யப்பட்டு புதிதாகக் கட்டப்பட்டு 08.11.2009 அன்று இயேசு விடுவிக்கிறார் குழுவினர் மூலமாக பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த கிராம ஆலயம் இயேசு விடுவிக்கிறார் மூலமாக அளிக்கப்பட்ட நிதி உதவியின் மூலம் கட்டப்பட்டதாகும்.

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN/07/2009-2011.
Postal at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

*God sent His
only Son to show
His great Love for us.
We have good reason
to rejoice,
not only at Christmas,
but every day of the year*



## Merry Christmas

**Rt. Rev. Dr. V. Devadass & Family,**

Shalom Pastors & BhilEvangelists

Office Staff of Shalom

Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street,
Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press,
59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss